ஆலந்தூர் மெட்ரோ ரெயில் நிலையத்தில்

# வாடகை மின்சார ஸ்கூட்டர் அறிமுகம்

## நிமிடத்துக்கு ரூ.1 கட்டணம் நிர்ணயம்



ஆலந்தூர் மெட்ரோ ரெயில் நிலையத் தில் பயணிகளின் வசதிக்காக வாடகை மின்சார ஸ்கூட்டர் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளதை படத்தில் காணலாம்.

சென்னை, டிச.8–

ஆலந்தூர் மெட்ரோ ரெயில் நிலையத்தில் பயணிகளின் வசதிக்காக வாடகை மின்சார ஸ்கூட்டர் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இதற்கு நிமிடத்துக்கு ரூ.1 என கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

### பயணிகளுக்கு வசதிகள்

சென்னையில் இயக்கப்படும் மெட்ரோ ரெயிலை தினமும் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட பயணிகள் பயன்படுத்தி வருகிறார்கள். மெட்ரோ ரெயில் நிலையத்தின் அருகில் உள்ள பஸ் நிலையம், புறநகர் மின்சார ரெயில் நிலையம், பறக்கும் ரெயில் நிலையங்களோடு இணைக்கும் வகையில் ஷேர் ஆட்டோ, ஷேர் கார் வசதி அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இதில், கோயம்பேடு, ஆலந்தூர், வடபழனி, டி.எம்.எஸ்., அண்ணாநகர் கிழக்கு ஆகிய மெட்ரோ ரெயில் நிலையங்களில் ஷேர் கார் வசதி உள்ளது.

அதேபோல், கிண்டி, திருமங்கலம், ஆலந்தூர், சின்னமலை, ஈக்காட்டுதாங்கல், கோயம்பேடு, பரங்கிமலை நிலையங்களில் ஷேர் ஆட்டோ வசதி உள்ளது. இது தவிர வாடகை சைக்கிள் வசதி அனைத்து ரெயில் நிலையங்களிலும் உள்ளது. திருமங்கலம், விமானநிலையம், சின்னமலை உள்ளிட்ட ரெயில் நிலையங்களில் வாடகை மோட்டார் சைக்கிள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது

### வாடகைக்கு கார் வசதி

இவை தவிர மீனம்பாக்கம், நங்கநல்லூர், சென்டிரல், ஆலந்தூர் உள்ளிட்ட ரெயில் நிலையங்களில் பயணிகளே கார்களை ஓட்டி செல்லும் வகையில் கார்கள் வாடகைக்கு வழங்கும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இதில் நல்ல வரவேற்பு இருப்பதால் அனைத்து ரெயில் நிலையங்களுக்கும் இதனை விரிவாக்கம் செய்ய திட்டமிடப்பட்டு உள்ளது. இன்னும் 2 மாதத்துக்குள் வாடகை கார் வசதி அனைத்து மெட்ரோ ரெயில் நிலையங்களிலும் கிடைக்கும் வகையில் தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளது.

ஷேர் கார், மோட்டார் சைக்கிள்களை வாடகைக்கு பெற தனியாக 'செயலி' (ஆப்) ஒன்றும் உருவாக்கப்பட்டு உள்ளது. இதேபோல் மெட்ரோ ரெயில் நிலையங்களுக்கு மினி பஸ் வசதி இணைக்கப்பட்டுள்ளது. 16 ரெயில் நிலையங்களில் தற்போது மினி பஸ் வசதி உள்ளது. அதனை மேலும் விரிவுபடுத்தும் வகையில் மாநகர போக்குவரத்து கழகத்துடன் மெட்ரோ ரெயில் நிர்வாகம் பேசி வருகிறது. மெட்ரோ ரெயில் பயணிகளை ஊக்குவிக்கவும், அதிகப்படுத்தவும் இன்னும் வசதிகள் விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது. இதற்காக ஆலந்தூர் மெட்ரோ ரெயில் நிலையத்தில் வாடகைக்கு மின்சார ஸ்கூட்டர் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

### விரைவில் கிண்டி, வடபழனியில்

இதுகுறித்து மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:–

சென்னையில் மெட்ரோ ரெயில் பயணிகளுக்கு பல்வேறு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. அந்தவகையில் தற்போது கூடுதலாக தனியார் நிறுவனம் ஒன்றுடன் இணைந்து ஆலந்தூர் மெட்ரோ ரெயில் நிலையத்தில் 6 மின்சார ஸ்கூட்டர் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இந்த சேவை தினமும் காலை 7 முதல் இரவு 9 மணி வரை அளிக்கப்படுகிறது. வாடகையாக ஒரு நிமிடத்துக்கு ரூ.1 கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஸ்கூட்டர்களை எடுத்து செல்பவர் எங்கு செல்கிறார்? என்பதை கண்காணிக்கும் வசதி உள்ளது. மேலும் கட்டணத்தை ஆன்லைனில் செலுத்தலாம்.

பயணிகள் ஸ்கூட்டரை ஆலந்தூரில் வாடகைக்கு எடுத்தாலும் பணி முடிந்தவுடன் அருகில் உள்ள எந்தவொரு மெட்ரோ ரெயில் நிலையங்களிலும் ஸ்கூட்டரை ஒப்படைக்கலாம். பயணிகளின் வரவேற்பை பொறுத்து ஸ்கூட்டர்களின் எண்ணிக்கை 15 ஆக நீட்டிக்கப்படும். தொடர்ந்து கிண்டி, வடபழனி மற்றும் அண்ணாநகர் டவர் ஆகிய ரெயில் நிலையங்களிலும் மின்சார ஸ்கூட்டர் திட்டம் விரிவுபடுத்தப்பட உள்ளது.

இவ்வாறு அதிகாரிகள் கூறினார்கள்.